தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2021–2022)

(பதினாறாவது பேரவை)

இரண்டாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 18–04–2022)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2021–2022)

(பதினாறாவது பேரவை)

இரண்டாவது அறிக்கை

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

பொருளடக்கம்

பக்கம்

1. 2021–2022 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு .. iii

2. முகவுரை .. v

இணைப்பு

1. தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கீழ்க்கண்ட ஆண்டறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை:-

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் .. 2007–2008 முதல் 2017–2018 வரை .. 1-6

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2021–2022)

(பதினாறாவது பேரவை)

(2021 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24 ஆம் நாள் அமைக்கப்பெற்றது)

1. ***தலைவர்***

   திரு. நா. இராமகிருஷ்ணன்

உறுப்பினர்கள்

2. திரு. மு. அப்துல் வஹாப்
3. திருமதி V. அமலு
4. திரு. செ. கிருஷ்ணமுரளி
5. திரு. துரை. சந்திரசேகர்
6. திரு. நா. புகழேந்தி
7. திரு. பெ. பெரியபுள்ளான் (எ) செல்வம்
8. திரு. கே. பொன்னுசாமி
9. திரு. அ. நல்லதம்பி
10. திருமதி எஸ். தேன்மொழி
11. திரு. த. வேலு

செயலகம்

முனைவர் கி. சீனிவாசன்	. . .	செயலாளர்
திரு. ந. இரவிசந்திரன்	. . .	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. தே. நாகராஜன்	. . .	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி சு.சீ. அலமேலு	. . .	தலைமை நிருபர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2021–2022)

(பதினாறாவது பேரவை)

இரண்டாவது அறிக்கை

முகவுரை

2021–2022 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக இரண்டாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

2021–2022–ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு **24–06–2021** அன்று அமைக்கப்பெற்றது.

குழுக் கூட்டம்

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் ஆண்டறிக்கைகள், ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பெற்றது குறித்து **05–01–2022** அன்று சென்னையில் நடைபெற்ற குழுக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையைச் சார்ந்த துறைச் செயலாளர் விளக்கம் அளித்தார். குழுமுன் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரைகள் மற்றும் பரிந்துரைகள் இவ்வறிக்கையின் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ளன.

06–04–2022 ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இவ்வறிக்கைக்கு குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை–600 009,
06–04–2022
பிலவ – பங்குனி – **23**
திருவள்ளுவர் ஆண்டு–2053.

நா. இராமகிருஷ்ணன்
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

இணைப்பு

இணைப்பு

தகவல் தொழில்நுட்பவியல் துறை

கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்	2007–2008	31–03–2009	03–02–2014	4 வருடங்கள் 10 மாதங்கள் 2 நாட்கள்
	2008–2009	31–03–2010	03–02–2014	3 வருடங்கள் 10 மாதங்கள் 2 நாட்கள்
	2009–2010	31–03–2011	03–02–2014	2 வருடங்கள் 10 மாதங்கள் 2 நாட்கள்
	2010–2011	31–03–2012	03–02–2014	1 வருடம் 10 மாதங்கள் 2 நாட்கள்
	2011–2012	31–03–2013	03–02–2014	10 மாதங்கள் 2 நாட்கள்
	2012–2013	31–03–2014	04–08–2014	4 மாதங்கள் 3 நாட்கள்

(1)	(2)	(3)	(4)	(5)
	2013–2014	31–03–2015	29–09–2015	5 மாதங்கள் 28 நாட்கள்
	2014–2015	31–03–2016	12–08–2016	4 மாதங்கள் 11 நாட்கள்
	2015–2016	31–03–2017	10–01–2018	9 மாதங்கள் 9 நாட்கள்
	2016–2017	31–03–2018	07–01–2019	9 மாதங்கள் 6 நாட்கள்
	2017–2018	31–03–2019	31–08–2021	2 வருடங்கள் 5 மாதங்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

துறையின் பதில்
(6)

(1) தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 2007 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு செயல்படத் தொடங்கியது. நிர்வாகக் காரணங்களினால் ஐந்து ஆண்டுகளாக செயலற்ற நிலையில் இருந்தது. 2011 ஆம் ஆண்டுக்கு பின்னர்தான் உரிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். அதன்பிறகே தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

ஒவ்வோர் ஆண்டும் தணிக்கை மற்றும் அறிக்கைகள் குறித்த விவரங்கள் தயாரிப்பு பணி அந்த நிதியாண்டின் நிதிக் கணக்குகள் முடிந்த பிறகு 2 மாதங்களில் நிறைவடைந்துவிடுகிறது. அதை அடுத்து வருடாந்திர பொதுக் குழு கூட்டத்தில் வைத்து ஒப்புதல் வாங்கப்பட்டு, பின்னர் அரசுக்கு அனுப்பி ஆய்வு செய்யப்பட்டு திருத்தம் செய்யப்படும். அதன்பிறகு, தமிழில் மொழிபெயர்த்து, அரசுக்கு அனுப்பி வைத்து பேரவைக்கு வைக்க வேண்டிய சூழல் இருப்பதால், காலதாமதம் ஏற்படுகிறது. குறிப்பாக, மொழிபெயர்ப்பு பணிகள், பிழைத் திருத்தம், நிதித் துறை ஒப்புதல், நிறுவன பொதுக் குழுக் கூட்ட ஒப்புதல் பெறுதல் போன்ற நிர்வாகக் காரணங்களால் காலதாமதம் ஏற்படுகிறது.

குழுவின் கருத்தை ஏற்று வருங்காலங்களில் காலதாமதத்திற்கான விளக்கத்தையும் அறிக்கையுடன் இணைத்து சமர்ப்பிக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கையொப்பமிட்ட குறிப்பினையும் இணைத்துவிடுகிறோம்.

குழுவின் பரிந்துரை
(7)

(1) 2007–2008 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கைகள், தயாரிப்புப் பணிகள் 2008 ஆம் ஆண்டுக்குள் துவங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நிறுவனச் செயலாளரோ, கணக்கு அலுவலரோ நியமிக்கப்படாததால் கணக்குகள் உரிய நேரத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதென்றும், 2007–2008 முதல் 2011–2012 வரையிலான காலத்தில் நிறுவனம் செயலற்ற நிலையில் இருந்ததால் நிறுவனச் செயலாளரோ, கணக்கு அலுவலரோ நியமிக்கப்படவில்லை என்றும் மேலாண்மை இயக்குநர் தெரிவித்திருக்கிறார். ஆனால் 2011–2012 ஆம் ஆண்டு நிறுவனம் புதுப்பிக்கப்பட்டவுடன் பணியாளர்கள் உரிய காலத்தில் நியமிக்கப்பட்டு அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது என்று துறை தெரிவித்த கருத்து ஏற்கக் கூடியதாக இருக்கிறது. ஆனால் அதன் பின்னரும் நிர்வாக அமைப்புகள் சரியாக இருந்தும் உரிய காலத்தில் ஆய்வுகள் நடத்தி, சட்டப் பேரவையில் ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்க முடியவில்லை.

2013–2014 முதல் 2017–2018 வரைக்கான ஆண்டறிக்கைகள் காலதாமதமாக வைக்கப்பட்டுள்ளன. 2007–2008 முதல் 2011–2012 ஆம் ஆண்டு வரையிலான ஆண்டறிக்கைகள் காலதாமதமாக வைக்கப்பட்டதற்கு அளிக்கப்பட்ட விளக்கத்தினை குழு ஏற்றுக் கொள்கிறது.

மேற்காணும் ஆண்டறிக்கைகளில் சம்பந்தப்பட்ட அமைச்சருடைய கையொப்பம் மிக மிக அவசியம். 2007–2008 ஆம் ஆண்டு முதல் 2011–2012 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கான அறிக்கைகளிலும்கூட சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சருடைய கையொப்பம் இல்லை. அத்துடன், 2012–2013 முதல் 2017–2018 வரை வைக்கப்பட்ட ஆண்டறிக்கைகளிலும் அமைச்சர் அவர்களுடைய கையொப்பம் இடம்பெறவில்லை. 2018–2019 மற்றும் 2019–2020 ஆகிய 2 வருடங்களுக்கான ஆண்டறிக்கைகள் இந்நாள்வரை பேரவையில் சமர்ப்பிக்கப்படவே இல்லை.

2014–2015 ஆம் ஆண்டு கணக்குகளை 31.3.2016–க்குள் அளித்திருக்க வேண்டும். ஆனால், 3 மாதங்கள் ஆய்வுக்கும், அரசுக்கும் அனுப்பி வைக்கவும், வருடாந்திரக் பொதுக் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் பெறவும், திருத்தங்கள் மேற்கொள்ளவும், மொழிபெயர்ப்பு செய்யவும், குழுவின் விதிகளின்படி 9 மாதங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, 2014–2015 ஆம் ஆண்டுக் கணக்குகள், 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து டிசம்பர் 15–க்குள் பணிகள் முடிக்கப்பட்டு பேரவையில் சமர்ப்பித்திருக்கலாம். அவ்வாறில்லையென்றால், 31.3.2016–க்குள் சமர்ப்பிக்கும் வகையில் மொத்தமாக ஓராண்டு காலம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதையும் மீறி 4 மாதங்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளதுடன், விளக்க அறிக்கையும் இணைக்கப்படவில்லை. மேலும், அதன்பிறகு சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆண்டறிக்கைகளில் காலதாமதத்திற்கான காரணம் குறித்த அறிக்கைகள் வைக்கப்படாததுடன், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கையொப்பமிட்ட குறிப்பும் இணைக்கப்படாமல் உள்ளது.

(2) 2018–2019 மற்றும் 2019–2020 ஆகிய 2 ஆண்டுகளைப் பொறுத்த வரையில் கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக வருடாந்திரப் பொதுக் குழுக் கூட்டம் கூட்டப்படாத காரணத்தினால், ஒப்புதல் வாங்க முடியாமல், கொரோனா பெருந்தொற்று குறைந்த பிறகு ஒப்புதல் பெறப்பட்டு, தற்போது அரசுக்கு அனுப்பக்கூடிய வகையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(2) 2018–2019 ஆம் ஆண்டில் கொரோனா பெருந்தொற்று இல்லை. 2019 ஆம் ஆண்டு இறுதியில்தான் கொரோனோ பெருந்தொற்று ஆரம்பித்தது. 2020 மார்ச் மாதத்திலிருந்துதான் கொரோனா பெருந்தொற்று பரவ ஆரம்பித்தது. 2018–2019 ஆம் ஆண்டு காலதாமதத்திற்கு துறை கூறும் காரணங்களை குழுவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

2018–2019 ஆம் ஆண்டறிக்கையைப் பொறுத்தவரையில், 2 வார காலத்தில் அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுவிடும். 2019–2020 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை பணிகளுக்கு நிர்வாக ஒப்புதலைப் பெற்று விரைவில் பேரவைக்கு சமர்ப்பிக்கப்படும். 2020–2021 ஆம் ஆண்டு அறிக்கையைப் பேரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

அத்துடன் 2018–2019 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் தணிக்கை அறிக்கையை ஓரிரு வாரத்திற்குள் குழுவிற்கு வழங்க வேண்டுமெனவும், 2019–2020 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை வருகின்ற நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்போது, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பார்வைக்குக் கொண்டு செல்வதற்குத் தாங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் குழு கேட்டுக் கொள்கிறது.

குழுவின் அறிவுரைகளை ஏற்று, இனிவரும் காலங்களில் இதுபோன்ற தாமதம் நடைபெறா வண்ணம் பார்த்துக்கொள்கிறோம்.

மேலும், மொழிபெயர்ப்புப் பணிக்காக காலதாமதமானதென்ற துறையின் பதில் குழுவிற்கு திருப்தியளிக்கும் வகையில் இல்லை. இனிமேல் இதுபோன்ற காலதாமதம் ஏற்படாதவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுமென குழு கேட்டுக்கொள்கிறது.

(3) ஆண்டறிக்கைகளில் துறைச் செயலாளர், மேலாண்மை இயக்குநர் பெயர் இடம்பெறுவதுபோல, குழு அறிவுறுத்தியவாறு வருங்காலங்களில் நிறுவனத்தின் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெயரும் தவறாது இடம்பெறுவது உறுதி செய்யப்படும்.

(3) 2011–2012 ஆம் ஆண்டு வரை சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டறிக்கைகளில் நிறுவனத்தின் விவரம் (Company Information) என்ற பக்கத்தில் நிறுவனத்தின் தலைவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதெனவும், அதன்பிறகு சமர்ப்பிக்கப்பட்ட 5 ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளில் நிறுவனத்தின் தலைவர் பெயர் குறிப்பிடப்படாமல் உள்ளது. இனிவருங்காலங்களில் துறைச் செயலாளர், மேலாண்மை இயக்குநர் பெயர்களைக் குறிப்பிடுவதுபோல, நிறுவனத்தின் தலைவர் பெயரையும் தவறாமல் குறிப்பிட வேண்டும் என்றும், தாமதத்திற்கான துறைச் செயலாளர் அவர்களின் விளக்கக் குறிப்புரையுடன், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கையொப்பத்துடன் ஆண்டறிக்கைகளை பேரவைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் குழு கேட்டுக்கொள்கிறது.

(4) குழுவின் பரிந்துரையை ஏற்றுக்கொள்கிறோம்.

(4) தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் ஆண்டறிக்கை சமர்ப்பிப்பது குறித்த பணிகளைக் கண்காணிப்பதற்கு துறையின்மூலம் ஓர் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)-ஐ நியமிக்க வேண்டும். அவரின் மூலமாக 3 மாதத்திற்கு ஒருமுறை கணக்குகளை கூர்ந்தாய்வு செய்து அதனை துறையுடன் கலந்தாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டால், அந்தந்த ஆண்டின் முடிவில் காலதாமதம் ஏற்படாமல் இருக்கும்.

அத்துடன் இந்நாள்வரை பேரவைக்கு சமர்ப்பிக்கப்படாமலுள்ள 2018–2019 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை 2022–2023 ஆம் நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடர் நடைபெறும் நாட்களில் துறை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் குழு கேட்டுக்கொள்கிறது.

முனைவர் கி. சீனிவாசன்
செயலாளர்.